


17.08.2024

தலைப்புச் செய்திகள்

1. உலகின் தென்பகுதியில் உள்ள நாடுகள் ஒருங்கிணைந்து வலுவுடன் திகழ வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. இந்தியாவின் வளர்ச்சி சென்ற நிதியாண்டில் கணிக்கப்பட்டதற்கும் மேலாக மேம்பட்டு காணப்பட்டதாக சர்வதேச நிதியம் தெரிவித்துள்ளது.

3. ஈரோடு திருப்பூர் கோவை மாவட்டங்களின் பாசன வசதிக்கான அத்திக்கடவு அவிநாசி திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

4. தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி சுத்திகரிப்பு பணிகளை கண்காணிப்பதன் அவசியத்தை மாநில வேளாண் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

5. ஸ்பெய்னில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் அங்கிதா ரெய்னா இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

பிரதமர்

உலகின் தென்பகுதியில் உள்ள நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து வலுவுடன் திகழ பிரதமர் திரு.நரேந்திரமோடி அழைப்பு விடுத்திருக்கிறார்.

சர்வதேச தென்னாடுகள் உச்சிமாநாட்டில் காணொலி மூலம் இன்று உரையாற்றிய பிரதமர் உலக அளவில் நிலவும் நிலையற்ற தன்மை மற்றும் சவால்கள் குறித்து கவலை வெளியிட்டுள்ளார்.

கோவிட் 19 பாதிப்புகளிலிருந்து பல நாடுகள் முழுமையாக மீட்சியடையவில்லை என்று கூறிய அவர், காலநிலை மாற்றம் உணவு, சுகாதாரம், எரிசக்தி பாதுகாப்பு போன்ற சவால்களை தென்னாடுகள் எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக குறிப்பிட்டார்.

இச்சூழலில் தென்னாடுகளுடன் இந்தியா திறன்மேம்பாடு மற்றும் வளர்ச்சி குறித்த தனது அனுபவங்களை பகிர்ந்துகொள்ள அர்ப்பணிப்புடன் இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

வர்த்தகம் உள்ளடக்கிய வளர்ச்சி, நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளின் முன்னேற்றம், மகளிர் தலைமையிலான மேம்பாடு, போன்றவற்றை முன்னெடுத்துச்செல்ல மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக அவர் கூறினார்.

கட்டமைப்பு, மின்னனு, எரிசக்தி இணைப்புகள் மூலம் தென்னாடுகள் இடையே ஒத்துழைப்பு மேம்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சூரியசக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு தொடர்பாக நம்நாடு மட்டுமல்லாமல் ஏனைய நட்புறவு நாடுகளும் பயனடைய இந்தியா உயர் முன்னுரிமை வழங்குவதாக குறிப்பிட்டார்.

தென்னாடுகள் நிர்ணயித்துள்ள இலக்கை எட்ட இந்த உச்சிமாநாடு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்த பிரதமர் இந்தியா சார்பில் உலகளாவிய விரிவான வளர்ச்சி திட்டத்தை முன்மொழிந்தார்.

வர்த்தக மேம்பாட்டை வலுப்படுத்த இந்தியா 25 லட்சம் டாலர் நிதியை வழங்கும் என்று உறுதியளித்த பிரதமர் வணிகம் தொடர்பான திறன்மேம்பாட்டு பயிற்சிகளுக்காக 10 லட்சம் டாலர் வழங்கப்படும் என்றார்.

நீடித்த நிலையான எதிர்காலத்திற்காக ஆளுமைமிகு தென்னாடுகள் என்ற கருப்பொருளுடன் இந்த உச்சிமாநாடு நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மன்சூக் மாண்டவியா

நாட்டில் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு உரிய பயிற்சி மற்றும் வசதிகள் வழங்கப்பட்டு வருவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

பாரீஸில் வரும் 28ஆம் தேதி தொடங்கும் பாராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய விளையாட்டு வீரர்களை வழியனுப்பும் நிகழ்ச்சியில் பேசிய அவர் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள் மூலம் ஊரக பகுதிகளில் உள்ள விளையாட்டு வீரர்கள் ஊக்குவிக்கப்படுவதாக கூறினார்.

இந்தாண்டு 84 இந்திய தடகள வீரர்கள் பல்வேறு பிரிவுகளில் பங்கேற்க உள்ளனர்.

மூமூமூமூமூமூமூமூமூமூமூமூமூமூ

கீதா கோபிநாத்

நாட்டின் வளர்ச்சி சென்ற நிதியாண்டில் எதிர்பார்த்தற்கும் மேலாக மேம்பட்டிருந்ததாக சர்வதேச நிதியத்தின் துணை நிர்வாக இயக்குனர் டாக்டர் கீதா கோபிநாத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தனியார் ஊடகத்திற்கு இன்று அவர் அளித்த பேட்டியில் அடுத்த 5, 6 ஆண்டுகளில் கூடுதல் வேலை வாய்ப்புகளை இந்தியா உருவாக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இந்தியாவில் இருசக்கர வாகனங்கள் விற்பனை முதல், நுகர்வோரின் வாங்கும் திறன் அதிகரித்துள்ளதாக கூறிய அவர் இதன்மூலம் ஒட்டுமொத்த நுகர்வு அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

வரும் மூன்று ஆண்டுகளில் இந்தியா உலகின் 3ஆவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று கூறினார்.

மூமூமூமூமூமூமூமூமூமூமூமூமூமூ

பெண் மருத்துவர்

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து நாடுமுழுவதும் மருத்துவர்கள் 24 மணி நேர வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று காலை தொடங்கிய இந்த போராட்டம் நாளை காலை வரை நடைபெறும் என்று இந்திய மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது.

மருத்துவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கென சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று இச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாட்டிலும் மருத்துவர்கள் இன்று வேலை புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தொழிற்பாதுகாப்பு படை

நாட்டின் பாதுகாப்பில் நவீன தொழில்நுட்ப சவால்களை சமாளித்து மத்திய தொழிற்பாதுகாப்பு படையினர் சிறப்புடன் செயலாற்ற வேண்டும் என மத்திய தொழிற்பாதுகாப்பு படையின் சென்னை பிரிவு தலைமை அதிகாரி திரு.ஆர்.எஸ்.சரவணன் வலியுறுத்தியுள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தை அடுத்த தக்கோலத்தில் 49ஆவது மத்திய தொழிற்பாதுகாப்பு பயிற்சி நிறைவு விழாவில் உரையாற்றிய அவர் பாதுகாப்பு பணியில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

ஈரோடு திருப்பூர் கோவை மாவட்டங்களின் 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாசன நிலங்கள் பயன்பெறும் ஆயிரத்து 916 கோடி ரூபாய் மதிப்பிலான அத்திக்கடவு அவிநாசி நீர்பாசன திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி மூலம் முதலமைச்சர் தொடங்கிவைத்துள்ள இந்த திட்டத்தின் மூலம் பவானி, ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களில் உள்ள ஆயிரத்து 45 ஏரிகள், குளம், குட்டைகளில் நீர் நிரப்பப்பட்டு, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நிலங்கள் பாசன வசதிபெற வகை செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு திருப்பூர் கோவை மாவட்டங்களில் 6 நீரேற்று நிலையங்கள், ஆயிரத்து 65 கிலோ மீட்டர் நீள குழாய்கள் அமைக்கப்பட்டு இந்த நீர்நிலைகள் நிரப்பப்பட உள்ளன.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் திரு.துரைமுருகன், திருமதி கயல்வழி செல்வராஜ், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஈரோடு பவானி காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு.முத்துசாமி, திரு.சாமிநாதன் ஈரோடு, திருப்பூர் கோவை மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் பங்கேற்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

தமிழகத்தில் கரும்பு விவசாயிகளை ஊக்குவித்து, உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மாநில வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர் மாநிலத்தில் கரும்பு உற்பத்தி சுத்திகரிப்பு பணிகள், இணைமின் உற்பத்தி திட்ட செயல்பாடுகளை கண்காணிப்பதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சர்க்கரை ஆலைகள் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் அமைச்சர் வழங்கினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

அன்பில் மகேஷ்

தமிழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் அரசு நூலகங்கள் விரைவில் அமைக்கப்படும் என்று மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில்மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்ட மைய நூலகத்தில் நூலகர் தின விழாவை ஒட்டி இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர் கோவை அரசு நூலகத்தில் அறிவுசார் மையம் அமைக்கப்பட்டு வருவதாக கூறினார்.

வாய்ஸ்

இந்நிகழ்ச்சியில் பேசிய திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் திருச்சி புத்தக திருவிழா அடுத்த மாதம் 28ஆம் தேதி தொடங்கி 10 நாட்கள் நடைபெற உள்ளதாக கூறினார்.

தமிழக வரலாற்றில் பெண்கள் என்ற தலைப்பில் இந்தாண்டு புத்தக திருவிழா நடைபெற உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தொழில்நுட்ப கல்வி

தமிழகத்தில் ஏழை சதவிகித அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேரும் மாணாக்கரிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் பொறியியல் கல்லூரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு எச்சரித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயிலும் முதல் பட்டதாரி மாணாக்கருக்கு கல்விக்கட்டண சலுகைக்கான அரசாணை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதை தொழில்நுட்ப கல்வி இயக்குனரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மீனவர்கள்

இலங்கை சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட 13 தமிழக மீனவர்கள் இன்று சென்னை வந்தடைந்தனர்.

கடந்த ஜுலை ஒன்றாம் தேதி நெடுந்தீவு அருகே எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக கூறி, ராமேஸ்வரம், புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 13 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்து இவர்களை விடுதலை செய்ய கடந்த 8 ஆம் தேதி இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து, சென்னை வந்த அவர்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

யானை

நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சடைந்துள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

தமிழ்நாடு இந்திய குடிமை பணி அலுவலர்களுக்கான கிரிக்கெட் போட்டியை மாநில இளைஞர்நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நாட்டிலேயே முதல் முறையாக பாத சிகிச்சை மையம் செயல்பட்டு வருவதாக மருத்துவமனை டீன் டாக்டர் திரு.பாலாஜி நாதன் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

செந்துறை வட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் வரும் புதன் கிழமை தொடங்குகிறது.

நாமக்கல் அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் நடப்பாண்டு மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 31ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் தொழில்முனைவோருக்கான வணிக ஒருங்கிணைப்பு சேவைகளை வழங்க 42 மையங்கள் நிறுவப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் அரசின் நல திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் குறித்து தவறான தகவல்கள் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சித்தலைவர் திருமதி சாருஸ்ரீ எச்சரித்துள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் தேசிய பெண் குழந்தைகள் விருதுபெற அடுத்த மாதம் 30 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சுப்புலெட்சுமி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் மேலைமலையனூர், திருவெண்ணெய்நல்லூர் வட்டாரங்களில் தமிழக அரசின் வளமிகு வட்டாரப் பணிகளுக்காக தலா 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பழனி கூறியுள்ளார்.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் கார்த்திகை தீபத் தேரோட்டத்திற்காக தேர்களை சீரமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளன.

தென்னிந்திய அளவிலான மூத்தோர் ஹாக்கி விளையாட்டு போட்டிகள் கிருஷ்ணகிரி மாவட்டம் நாகரசம்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று தொடங்கின.

கர்நாடகா, புதுவை மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 20 அணிகள் இதில் பங்கேற்றுள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

டென்னிஸ்

ஸ்பெய்னில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – ரஷ்யாவின் யுடையெ ஊாயசயநளய வை இன்று எதிர்கொள்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு